1972 மார்ச் 15]

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இந்தப் பிச்சைக்காரர் விடுதிகளில் சேர்க்கப்படும் பிச்சைக்காரர்கள் எந்த அடிப்படையில் சேர்க்கப்படுகிறார்கள், பிச்சை எடுப்பது ஒன்றைக்கொண்டுதானா? ஏனென்றால் பிச்சைக்காரர்களில் சிலர் பணம் சேர்த்து வைத்துக் கொண்டு ..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விளக்கமெல்லாம் வேண்டாம், கேள்வியாகக் கேளுங்கள். நேரமாகிறது.

திரு. கே. எ. வகாப் : அப்படி இருக்கிறார்கள். ஆகவே அதில் உண்மையான பிச்சைக்காரர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, பிச்சைக்காரர்கள் எங்கெங்கு பிச்சை எடுக்கிறார்களோ, பஸ் ஸ்டாண்ட், ரயில்வே ஸ்டேஷன், கோயில், இன்னும் பல வீதிகளில் பிச்சை எடுக்கிறார்கள்—அவர்களைப் போலீசார் நேரடியாகக் கைது செய்து வழக்கு மன்றத்தில் நிறுத்தி, அவர்கள் பிச்சை எடுக்கிறார்கள், அவர்களுக்கு யாரும் இல்லை என்ற வகையில் கொண்டு வருகிறார்கள். முதலிலே நாம் தொழுநோய் பிச்சைக்காரர்களுக்கு முதலிடம் தந்து அவர்களின் மறுவாழ்வுக்காக ஒரு நல்ல ஏற்பாட்டை இப்பொழுது நடத்திக்கொண்டு வருகிறோம். பிறகு ஏனைய பிச்சைக்காரர்களின் நிலைமைகளை இந்த அரசாங்கம் கவனிக்கலாம்.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள குத்தகைப் பாட்டம் நிலங்கள்

*512. வினா—திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை : மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் முன்பிருந்த அரசால் குத்தகைப் பாட்டம் என்ற முறையிலே கொடுக்கப்பட்ட நிலங்களுக்கு பட்டா வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்த கன்னியாகுமரி மாவட்டத்தில் உதயகிரி கோட்டை என்ற பகுதியில் சுமார் 140 ஏக்கர்கள் அளவிற்கு தனியார் கையில் இருக்கிறது. இதை மீட்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறதா? அதேமாதிரி எஸ்டேட் உடைமையாளர்கள் அருகாமையில் உள்ள புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்து வைத்திருக்கிறார்கள். அதையும் திரும்பப் பெறுவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, மூலக் கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் தொடர்பு இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்து அளிக்கலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் கூறும் பொழுது குத்தகைக்கு விடப்பட்டிருக்கும் நிலத்திற்கு பட்டா வழங்கப்படும் என்று சொன்னார்கள். இப்பொழுது குத்தகைக்காரர்களாக இருக்கும் அவர்களுக்கே கொடுக்கப்படுமா அல்லது அந்த நிலம் ஏழைகளுக்கு விநியோகிக்கப் படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, 1950 திருவிதாங்கூர்-கொச்சின் சட்டப்படி இப்பொழுது அவர்களுக்குக் குத்தகைக்கு விடப் பட்டிருக்கிறது. அந்தச் சட்டத்தைத் திரும்பப் பெற்று தர்கா சட்டம் அமல் படுத்தப்படும் நேரத்தில் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும். இப்பொழுது யார் நிலத்தை உழுகிறார்களோ அப்படி உழுகின்றவர்களுக்குக் கொடுக்க அரசாங்கம் யோசிக்கும்.

ஜவ்வாது மலைப்பகுதியில் அணுவளக் கனிப்பொருள்கள்

*513. வினா—திரு. எம். ஏ. லத்திப்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு மாவட்டம், ஜவ்வாது மலைப்பகுதியில் அணுசக்தி உற்பத்திக்குத் தேவையான யுரேனியம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) இந்திய அணுமின் ஆய்வுத்துறை வடஆற்காடு மாவட்டத்தில் ஜவ்வாது மலையைச் சுற்றியுள்ள ஆண்டியப்பனூர் பகுதியில் அணுவளக் கனிப்பொருட்களை கண்டறிய நில ஆய்வு செய்தது. ஆனால் மேற்கண்ட இடங்களில் குறிப்பிடத்தக்க யுரேனியம் அடங்கிய கனிப்பொருட்கள் ஒன்றும் கண்டு பிடிக்கப்படவில்லை.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, யுரேனியம் கண்டு பிடிக்கப்பட வில்லை என்று சொன்னார்கள். வேறு சில கனிப்பொருள்களை அங்கே கண்டறிந் திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அப்படிக் கண்டறிந்த பொருள்கள் என்ன, அதைப்பற்றி அரசாங்கம் ஏதாவது திட்டம் அளித்திருக்கிறார்களா, தொழில்கள் ஆரம்பிப்பதற்கு உதவி செய்திருக்கிறதா என்று அறிய விரும்பு கிறேன்.